# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2035 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

### பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

**கவனிக்க :** 25.08.2017 ஆந் திகதியன்று மேலேயுள்ள தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் அறிவித்தல் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016/ 2017

நாடு முழுவதும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில், பொறிமுறை, புகையிரத திணைக்களத்தின் மின் (கனதி) மற்றும் மின் (இலகு) பொறியியல் ஆகிய வகுதிகளைச் சேர்ந்த பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு, "செயலாளர், அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில்- "நிறைவேற்றுத்தர சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த இலங்கை பொறியியலாளர் சேவையின் பதவிகள் தொடர்பான திறந்த போட்டிப் பரீட்சை - 2016/ 2017" எனத் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2017.09.25 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற் போனமை அல்லது தாமதம் குறித்துச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப் படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்க வேண்டும்.

திறந்த அடிப்படையில் இலங்கை பொறியியலாளர் சேவைக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகளின் எண்ணிக்கை 229 ஆவதுடன், அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் வகுக்கப்படுகின்றன.

| வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிவில் வகுதி | 162 |
| பொறிமுறை வகுதி | 15 |
| மின் வகுதி | 09 |
| பௌதிக வளங்கள் வகுதி | 42 |
| இரசாயன | 01 |
| மொத்தம் | 229 |

1. **ஆட்சேர்ப்பு முறை :**

1.1 திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக குறித்த பாடப் பரப்புக்களின் கீழ் தொழிற்சார் தகைமை பெற்ற பொறியியலாளர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவர். நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் சிறு தொகையினரை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

1.1.1 நியமனம் வழங்குவது தொடர்பாக ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளின் ஒழுங்குமுறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பதவிகளுக்கான தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றி பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படுவர்.

1.1.2 ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ்வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், அலுவலர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படுவர். (கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பதவிகளுக்கான தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றி பரீட்சிக்கப்படும். பின்னரே அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படுவர்.

2. **சேவை நிபந்தனைகள் :**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1836/ 6 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமாவதுடன், அதற்குரித்தான ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.3 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்றாண்டு (03) நன்னடத்தைக் காலத்திற்கு கீழ்ப்படுவதுடன், மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

2.4 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக மற்றைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை ஐந்தாண்டுகளில் (05) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களினால் நன்னடத்தைக் காலத்தினுள் ஒரு அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் அனைத்து கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

2.6 நியமனம் பெற்றவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

2.7 நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவையைப் போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

2.8 தாம் நியமிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும் நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற அல்லது தவிர்க்கின்ற நியமனம் பெறுநர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

3. ***சம்பள அளவுத்திட்டம்***.- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமையவும், SL - 1 - 2016 சம்பள வகுதிக்கமையவும், இப்பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2170 - ரூபா 1,10,895 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும். (துங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.)

எவ்வாறாயினும், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பூரண தொழிற் தகைமைகளைப் (பட்டயப் பொறியியலாளர் நிலை) பெற்றுள்ள அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் பொறியியலாளராக பூரண தொழிற் தகைமைகளைப் பெற்ற அவ்வலுவலர் சேவையின் III ஆம் தரத்தின் ஆறாவது (06) சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவர்.

4. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

4.1 ***கல்வித் தகைமைகள் :***

4.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நான்காண்டுகால (04) முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

4.1.2 மேற்படி 4.1.1. இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாட விதானத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.2 ***தொழிற் தகைமைகள் :***

4.2.1 இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து அது சம்பந்தமான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளது என்பது பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந் நிறுவனத்தினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை :**

5.1 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

5.2 எவ்வாறாயினும், 2013.11.11 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்துள்ள அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவர் (அதாவது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக (முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர்) அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவி வகிக்கும் அலுவலரொருவராக அல்லது ஏனைய அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகைமை பெற்ற தொழில்நுட்ப அலுவலர் ஒருவருக்கு) உச்ச வயதெல்லை 45 ஆகும்.

6. **தேகாரோக்கியம் :**

6.1. எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

7.1 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

7.2 சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

7.3 மேலே 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கு காரணியாயமைந்த பூரண விபரங்களடங்கிய பெறுபேற்று ஆவணங்களில் (Academic transcript) அடங்கியுள்ள பாடங்கள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சேவை வகுதிக்கான தேவைப்பாடுளுடன் எல்லா வகையிலும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

7.4 ஏதேனும் சமயப் பிரிவொன்றின் போதகராக பதவி வகிக்கும் ஒருவர் விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற மாட்டார்.

7.5 மேலே இல. 5.2 இன் கீழ் தகைமை பெறும் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் தமது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியளவில்


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

அச் சேவையில் உடன் முன்னரான 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.6. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :-

8.1 ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக காணப்படும் சந்தர்ப்பங்களில்,

8.1.1 வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ள வகுதியின் கீழ் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படுவதில்லை. அவர்களது சேவை மூப்பின் ஒழுங்குமுறைப்படி தீர்மானம் எடுப்பதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

8.1.2 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுவதுடன், அதில் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் அதற்கமைய வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், உடற்தகைமைகள் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

8.1.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கை ஆட்சேர்க்கப்படும்போது, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கு அமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரியில் இருந்து தேர்ச்சி முன்னுரிமைப்படி சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்படும்.

8.1.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பாக 100 புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) எக்காரணம் கொண்டும் ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை மாற்றப்பட மாட்டாது.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும் :

| | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | உச்ச புள்ளி கள் |
|---|---|---|
| 01 | கல்வித் தகைமைகள் | 60 |
| 02 | சேவைக்கால அனுபவம் | 10 |
| 03 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 04 | வெளித் திறன்கள் /விசேட திறன்கள் | 05 |
| 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்கள் | 05 |
| | மொத்தம் | 100 |

**குறிப்பு**.- (அ) நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வது என்பது பதவி வழங்கலுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்படலாகாது.

(ஆ) கட்டமைக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறைக்கமைய ஒவ்வொரு வகுதியின் கீழ் புள்ளி வழங்கும் போது அதற்குரிய குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகள், சான்றிதழ்கள் என்பவற்றைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரரினால் தனது கையொப்பத்தை இட்டு சத்தியப் பிரதி என சான்றுப்படுத்தப்பட்ட அச்சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் குறித்த நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக காணப்படும் சந்தர்ப்பங்களில்,

8.2.1 வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ள வகுதியின் கீழ் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படுவதுடன்,விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்குமுறைக்கமைய சாதாரண நேர்முகப் பரீட்சை தொடர்பாக அழைக்கப்படுவர்.

8.2.2 மேற்படி 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியலாளர்களது ஆட்சேர்ப்பு வரிசையை உறுதிப்படுத்தும் நோக்குடன் இத்தரப்பரீட்சை நடாத்தப்படும்.

8.2.3 எழுத்துமூலப் பரீட்சை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.2.4 எழுத்துமூலப் பரீட்சையின் விடயப்பரப்பு

1. மேற்படி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் விஞ்ஞான கற்கையின் மூலம் விண்ணப்பதாரியின் பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானமெடுக்கும் திறன் என்ப வற்றை ஆராய்வதை நோக்காக கொண்டு இப்பரீட்சை 100 புள்ளிகளைக் கொண்ட எழுத்து மூல திறனாய்வு பரீட்சையினால் வரை யறுக்கப்படுகின்றது. வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன், அது தொடர்பாக 1 1/ 2 மணித்தியாலயம் வழங் கப்படும். அத்துடன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.2.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் சாதாரண நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் சாதாரண நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுவதுடன், அதில் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் அதற்கமைய வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், உடற்தகைமைகள் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

8.3 பரீட்சார்த்தியொருவரினால் நேர்முகப் பரீட்சையின்போது குறித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வனைத்து ஆவணங்கள்/ சான்றிதழ்கள் எல்லா விதத்திலும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரியின் தழுவல் அங்கீகாரத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு ஆவணமும்/ சான்றிதழ்களும் செல்லுபடியாகாது.

8.4 அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரரினால் தனது கையொப்பத்தை இட்டு உண்மையான பிரதி என சான்றுப்படுத்தப்பட்ட அச்சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் குறித்த நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

8.5 பல பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உசிதமான தீர்மானம் எடுக்கப்படுவதுடன், அதுவே இறுதியான தீர்மானமாகும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

9.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் தமது விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.2 பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமும், “செயலாளர், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு” எனும் முகவரிக்குச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக் கொண்ட பண வைப்புப் பற்றுச்சீட்டின் வாடிக்கையாளர் பிரதியை (CUSTOMER'S COPY) விண்ணபத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். அப் பிரதியின் நிழற்பிரதியை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

வைப்பிலிடும்போது பின்வரும் தகவல்களை நிதிவைப்புப் பற்றுச்சீட்டில் (Cash Deposit Slip) உள்ளடக்கவும்.

| | | |
|---|---|---|
| கணக்கு வைத்தி ருப்பவரின் பெயர் | - | செயலாளர், பொது நிர்வாக மற்றும் முகா மைத்துவ அமைச்சு. |
| கணக்கு வைத்தி ருப்பவரின் முகவரி | - | சுதந்திர சதுக்கம், கொழும்பு 7 |
| வங்கிக் கணக்கு இலக்கம் | - | 7040712 |
| இலங்கை வங்கி | - | சுதந்திர சதுக்கம். |

9.3 குறித்த வகுதிகளின் கீழ் எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படாது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்பட்ட போதிலும், பரீட்சை தொடர்பாக செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

9.4 இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

9.5 முழுமையான தகவல்கள் அடங்கப்பெறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்துக்கு நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பார்வை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதியட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கவனிக்கவும்**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்படுவது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

9.6 விண்ணப்பப்படிவம் A4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படல் வேண்டும். இல. 1.0 இலிருந்து 5.0 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், 6.0 இலிருந்து 7.0 வரையான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலும், 8.0 இலிருந்து 11.0 வரையான தலைப்புக்கள் மூன்றாவது பக்கத்திலும், இலக்கம் 12 நான்காவது பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.அது குறித்த தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மாதிரிப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ்மாதிரிப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறே மாதிரிப் படிவத்துடன் ஒவ்வாத அத்துடன் சகல அம்சங்களும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பரீட்சை அறிவித்தலிலுள்ள மாதிரிப் படிவத்துக்கிணங்கவே விண்ணப்பம் காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதன் பற்றுச்சீட்டு அதில் ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் பரீட்சார்த்திகள் திருப்தியுறல் வேண்டும்.மேலும் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை பரீட்சார்த்திகள் தம்வசம் வைத்திருத்தல் உசிதமானது.

9.7 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிக்கப்பட்ட பரீட்சைத் திகதிக்கு முன்னர் குறைந்தது ஐந்து (05) நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறுஅறிவிக்கும் வேளையில் பின்வருவன தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும் ; அதாவது, பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றுடன் விண்ணப்பதாரிகள் கொழும்புக்கு வெளியே இருக்கும் பட்சத்தில், அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு,கோரிக்கைக் கடிதம் ஒன்றை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011 - 5288978 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைப்பது பயனுள்ளதாகும்.அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அழைப்பினை மேற்கொள்ளும் வேளையில், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (போட்டோ) பிரதி, செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, தங்கள் வசமுள்ள விண்ணப்பத்தை தபாலிலிட்ட போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பவற்றைக் கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

9.8 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்பேரில் பரீட்சையை நடாத்துதல், பிட்போடுதல் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கேயுண்டு.

9.9 பரீட்சை நடாத்துதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் அவை மீறப்படும் பட்சத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் ஆளாக நேரிடும்.

9.10 ***விண்ணப்பதாரரின்ஆளடையாளம்.***- பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தினை நிரூபிக்குமாறு கோரப்படுவார். பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள்அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9.11 அரச சேவை/மாகாண அரச சேவை, அரச கூட்டுத்தாபனங்களில் சேவை புரியும் அலுவலர்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன் சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது உறுதிப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமாகும்.குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.அத்துடன் ஏனைய சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற அதிகாரியொருவர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர், 240,360 ரூபா அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது பிற மதங்களைச் சேர்ந்த சமயத்தலங்களுக்குப் பொறுப்பான பதவியிலுள்ள ஒருவர் ஆகிய யாரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்க :**

(அ) விண்ணபத்துடன் 4 ஆம் பந்தியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் அச்சான்றிதழ்களின் பூரண விபரங்கள் அடங்கிய பெறுபேறு அட்டவணைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் நிறைவேற்றுத் தர சேவை வகுதியின் III ஆம் தரத்திற்கு உரியதான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

11. அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் பெறுபேறு வெளியிடப்படும் திகதியை அறிவித்து அனுப்பிய பிறகு, எழுத்துமூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அடங்கிய பெறுபேறு பரீட்சை எழுதிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பிவைப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் ஒரு மொழியில் முன்பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான விளம்பரமே வலுவானதாகவிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2017, ஓகத்து 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு

**இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 / 2017**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT ENGINEERS TO THE GRADE III OF THE SRI LANKA ENGINEERING SERVICE – 2016/2017

பரீட்சைக்கு தோற்றும் மொழி :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

விண்ணப்பிக்கும் வகுதி :

| | |
|---|---|
| சிவில் | 1 |
| இயந்திரவியல் | 2 |
| மின் (கனதி/ இலகு) | 3 |
| இரசாயனம் | 4 |
| பௌதீக வளம் | 5 |

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : Mr./Mrs./Miss ............................................ ................................................................................................ ................................................................... உதாரணம் : Mr. GUNAWARDHANA, M.G.B.S.K.

1.2 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

............................................................................................
............................................................................................
......................................

1.3 முழுப் பெயர் :----.
(தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

2.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.2 பரீட்சை அனுமதிப்பத்திரம் அஞ்சல் செய்ய வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :
வீடு :----.
கையடக்க :----.

2.4 தபால் நகரம் :----.

2.5 மின்னஞ்சல் முகவரி :----.

3. ஆண்/ பெண் :
ஆண் - 0, பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

5.

5.1 தேசிய இனம் :
(சிங்களவர் -1/ தமிழர் - 2/
இ. தமிழர் -3/ முஸ்லிம் - 4/
ஏனையோர் - 5)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

5.2 விவாகமானவர்/ விவாகமாகாதவர் :
(விவாகமாகாதவர் - 1 /
விவாகமானவர் -2)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

5.3 பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி

5.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. 6.1 கல்வித் தகைமைகள் :

(i) பட்டம் அல்லது வர்த்தமானி அறிவித்தலின் 4.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் வலுவிலிருக்கும் திகதி :----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) பதிவு செய்யப்பட்ட இலக்கம் மற்றும் திகதி :----.

(iv) பாடநெறியின் பெயர் : (உதாரணம் : பொறியியல் விஞ்ஞானமானி, Bsc Engineering)

(v) பாடத்திட்டம் : (உதாரணம் : சிவில், இயந்திரவியல், மின்சாரம், இரசாயனவியல், பௌதீகவியல்) :----.

(vi) பட்டம் அல்லது வர்த்தமானி அறிவித்தலின் 4.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அல்லது பூரணப்படுத்திய வருடம் :----.

(vii) இறுதியாண்டின் பாடங்கள் :----.

(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

6.2 தொழிற் தகைமைகள் (உதாரணம் : AMIE, MICE, MIE) :

............................................................................................
.....................................................

(i) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவ இலக்கம் :

7. தற்போது வகிக்கும் பதவி மற்றும் முன்னர் வகித்த பதவிகள் காணப்படுமாயின் அவை பற்றிய தகவல்கள் :----.
(சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி மற்றும் விலகிய திகதிகள், அவ்வாறு விலகுவதற்கான காரணத்தினையும் குறிப்பிடுதல் வேண்டும்.)

7.1 பதவி :----.

7.2 திணைக்களம் / நிறுவனம் :----.

7.3 நியமனத் திகதி :----.

7.4 நிரந்தர / ஓய்வூதியத்துடன் கூடிய / ஓய்வூதியமற்ற/ தற்காலிக என்பன பற்றி :----.

7.5 பதவி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி :----.

7.6 பதவியின் சம்பள அளவுத்திட்டம் மற்றும் தற்போது கிடைக்கப்பெறும் சம்பளம் :----.

7.7 முன்னர் வகித்த பதவிகள் தொடர்பான விபரங்கள் : (மேலதிக தாளொன்றினைப் பயன்படுத்த முடியும்) :----.

7.8 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பதவியை வகிக்கும் தாங்கள் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அக் குற்றம் மற்றும் கிடைக்கப்பெற்ற தண்டனை தொடர்பாக விளக்கவும்.

............................................................................................
.....................................................

8. ஏதேனும் குற்றச் செயலொன்றுக்கு எப்போதாவது அல்லது நீதி மன்றத்தில் குற்றவாளியாக இருந்திருப்பின், அக்குற்றம் மற்றும் கிடைக்கப்பெற்ற தண்டனை தொடர்பாக விளக்கமாக குறிப்பிடவும் :..
............................................................................................
............................................................................................
............................................................................................

9. பற்றுச்சீட்டின் வாடிக்கையாளர் பிரதி (Customer's Copy) யினைக் கழராதவாறு ஒட்டவும்.
(பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் வாடிக்கையாளர் பிரதி (Customer's Copy) யின் பிரதியொன்றினை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமானதாக அமையும்)
செலுத்திய இலங்கை வங்கிக் கிளை :----.
திகதி :----.

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானதும் சரியானதும் என உறுதியுரைக்கின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விபரம் பிழையானது அல்லது உண்மைக்குப் புறம்பானது என அறியப்படுமிடத்து எவ்வித இழப்பீட்டுத் தொகையும் வழங்காது என்னை சேவையில் இருந்து பதவி நீக்கம் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்துள்ளேன்.

மேலும், பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறு களை பிரசுரித்தல் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினைச் சான்றுப் படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலில் 9.10 இற்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ....................................................................... (முழுப் பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளதாகவும், அப்பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளதாகவும், .......................... .......... ஆந் திகதியன்று அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை சான்றுப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.
சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு சான்றுப்படுத்தவும்.)

12. விண்ணப்பதாரி அரச சேவையாளராயின்,திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற .............................. ................................................ (முழுப் பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், ............................. ஆந் திகதியன்று அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலே 07 ஆம் பந்தியில் அலுவலரின் தற்போதைய சேவை பற்றி வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், அவரது பணிகள் மற்றும் நடத்தைகள் ....................................எனவும் சான்றுப்படுத்துகின்றேன். தற்போது அவர் வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்பதற்கு முடியும்/ முடியாது.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையிட்டு சான்றுப்படுத்தவும்)

8-1150

---

**கவனிக்க :** 31.08.2017 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

**கல்வி அமைச்சு**

2018 ஆம் கல்வி ஆண்டுக்காக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல்

2018 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறும் ஒரு வருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேர பாடநெறியைத் தொடர்வதற்கு தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களில் நடைபெறும்.

03. அவ்வப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடநெறிக்காக ஒரு மொழி மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் :-

(1) கொழும்புப் பல்கலைக்கழகம் – சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலம்
(2) பேராதனைப் பல்கலைக்கழகம் – சிங்கள மொழி மூலம்
(3) யாழ் பல்கலைக்கழகம் – தமிழ்மொழி மூலம்

04. சகல விண்ணப்பதாரர்களும் தாம் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர் என்பதனை உறுதிசெய்ய வேண்டும் :-

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசையாக இருத்தல்.

(ii) 2017.09.22 ஆந் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல்.

(iii) சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியமும் சிறந்த நடத்தையும் கொண்டவராக இருத்தல்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு/உயர் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பிறிதும் நிறுவனத்தின் பட்டதாரியாகவோ அல்லது அதற்குச் சமனான மட்டத்தில் கவனத்திலெடுக்கப்படும் வேறு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்.

(v) கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் :

(அ) * இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவை
* இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை
* இலங்கை ஆசிரியர் சேவை

(ஆ) இலங்கை அதிபர் சேவை

(இ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை

(ஈ) இலங்கை கல்வி நிர்வாக சேவை

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2017.09.22 ஆந் திகதியன்று இலக்கம் 4(v) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் பட்டதாரியாக ஒரு வருடகால சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை :**

(i) கற்பித்தலில் தேசிய டிப்ளோமா நியமனம் பெற்ற ஆசிரியர்கள் 2017.09.22 ஆந் திகதியன்று நியமனத்துக்குரிய ஒப்பந்த முறியின்படி தமது கட்டாய சேவைக்காலமான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் மற்றும் 4(vi) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்திசெய்துள்ளாரெனின் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

(ii) கற்கை விடுமுறை பெற்று பிணைமுறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2017.09.22 ஆந் திகதியன்று பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்து அல்லது அவ்வாறின்றேல் அதில் ஐந்து வருடங்கள் (05) பூர்த்திசெய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை பெறுவர்.

(iii) கல்விமானி பட்டதாரிகள் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது.

05.

**5.1. தேர்ந்தெடுக்கும் ஒழுங்குமுறை :**

(i) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கினர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் இலக்கம் 4(v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரி தனக்குரிய சேவை/சேவைகளுக்கான பதவி/பதவிகளின் சேவைக்காலத்திற்காக நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக்காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகள் 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் 4(v) இல் காட்டப்பட்டுள்ள சேவைகளிலொன்றில் முதல் நியமனம் பெற்று சேவைக்குரிய பதவியில் முதல் கடமையைப் பொறுப்பேற்ற தினம் தொடக்கம் ஆகும்.

**கவனத்திற்கு :**

* 4(v) இல் குறிப்பிடப்பட்ட சேவையில்/சேவைகளின், பதவியில்/பதவிகளில் தொடர் தேர்ச்சியாக சேவைக்காலம் இருக்க வேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக்காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகள் ஆகியவற்றின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாகக் கருதி அப்புள்ளிகளின் தொடருக்கமைய பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கையில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும்.

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

**5.2 எழுத்துமூலப் பரீட்சை :**

(i) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடைபெறும்.

(ii) மேற்கூறப்பட்ட 02 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழிமூலம் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்பட வேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது :-

(அ) **பொது அறிவு**.- சமகாலத் தகவல்கள், பொதுஅறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்)

(ஆ) **பொது உளச்சார்பு**.- மொழி ஆற்றல், விளக்கம், தர்க்க மற்றும் புள்ளிவிபர ரீதியிலான திறன் தொடர்பான வினாப்பத்திரம். (நேரம் 1 மணித்தியாலம் 30 நிமிடம்)

5.3. **நேர்முகப்பரீட்சை :**

(i) நேர்முகப்பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடரத் தகைமை பெற்றவர் என உறுதிசெய்ய வேண்டும்.

(ii) பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4(v) இற்குரிய சேவை/சேவைகளுக்குரிய, உரிய பதவியின்/பதவிகளின் சேவைக்காலத்தை உறுதி செய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக முதல் நியமனத்திற்குரியதான கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதி செய்யப்பட வேண்டும். இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.

(iii) அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட பிரிவெனாக்கள் மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் :-

(அ) பாடநெறிக்காக விடுவிக்கப்படுவதாகவும்,

(ஆ) பாடநெறியைத் தொடரும் காலப்பகுதிக்குள் சம்பளம் கொடுக்கப்படுவதாகவும்,

(இ) பாடநெறியைப் பூர்த்திசெய்த ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாகவும்,

(ஈ) குறித்த ஆசிரியரின் கற்கைக் கால எல்லைக்குள் அவரது வெற்றிடத்திற்கு வேறு ஆசிரியர் ஒருவரை இணைத்துக்கொள்வதில்லை என்றும்

(உ) ஆசிரியரின் பணிக்கூறுகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதாக நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி/நிர்வாக சேவை முகாமையாளரினால் உறுதிசெய்யப்பட்ட பிரகடனப் படிவத்தை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

06. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை :**

(i) வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டும்.

(ii) கட்புலன் /செவிப்புலனற்ற /ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் "கட்புலனற்ற/செவிப்புலனற்ற/ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரிகள்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iii) **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்**.- பரீட்சைக் கட்டணமாக 900 ரூபா பணத்தை அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

2017.08.31 ஆந் திகதி தொடக்கம் 2017.09.22 ஆந் திகதி வரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :**

(அ) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழு நேரம் - 2018" பாடநெறி எனக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) 2017.09.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுச் சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(இ) சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவரால் விண்ணப்பதாரியின் சுய விபரக்கோவைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படின் கடமை விடுமுறை பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்கு இவ்விண்ணப்பப்படிவம் பயன்மிக்கதாக அமையும்.

(v) நேரசூசி மற்றும் அனுமதிப்பத்திரம் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுவதுடன் தமது அனுமதிப்பத்திரம் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்காதபட்சத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(இ) முகவரி ;

(ஈ) பணம் செலுத்திய தபால் அலுவலகம் மற்றும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் ;

(உ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி ;

(ஊ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்.

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றியமைக்கப்படவோ மாட்டாது.

(vii) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ix) உரிய பாடநெறியைத் தொடருவதற்கு விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

07. **கற்கை விடுமுறை**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள், தேசிய பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்களில் சேவையாற்றும் அதிபர் தரத்திலுள்ளவர்கள், ஆசிரியர்கள் கற்கை விடுமுறையினை கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறை மாகாணக் கல்விச் செயலாளர்களினாலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

08. **பிணை முறி**.- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின் அவர் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்குவிதி முறைகளுக்கமைய குறிப்பிட்ட காலத்திற்கு திணைக்களத்தில் சேவையாற்றுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /கல்விச் செயலாளருடன் பிணை முறியில் கையொப்பமிட வேண்டும்.

09. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யாது உரிய கால எல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீண்டும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், நடத்தை, வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி வாசகங்களில் ஏதேனும் ஒத்திருப்பின்மைகள் இருப்பின் சிங்கள மொழி வாசகங்களே செல்லுபடியாகும்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு
'இசுருபாய',
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 31.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

2018 ஆம் கல்வி ஆண்டுக்காக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்கான விண்ணப்பம்

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

| விண்ணப்பிக்கும் மொழி மூலம் (சிங்களம் /தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு / யாழ்ப்பாணம்) | விண்ணப்பிக்கும் பல்கலைக்கழகம் (கொழும்பு / யாழ்ப்பாணம்/பேராதனை) **கவனத்திற்கொள்க :** விருப்புத் தேர்வு தொடர் ஒழுங்கின்படி பல்கலைக்கழகங்கள் இரண்டைத் தெரிவுசெய்க. |
|---|---|---|
| | | 1. |
| | | 2. |

01. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் ஆங்கில பெரிய எழுத்துக்களில் (முதல் எழுத்துக்கள் பின்னால்) :
..........................................................
உ-ம் : Mr. SILVA, A.B.C

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

02. (i) (அ) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ஆ) அலுவலகத் தொலைபேசி இலக்கம் :----.

(ii) (அ) சொந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ஆ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

(iii) சேவையாற்றும் பாடசாலை / நிறுவனத்தின் அமைவிடம் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரச பாடசாலை/தனியார் பாடசாலை /பிரிவெனா/ஏனையவை) :----.

03. (i) பிறந்த திகதி :
ஆண்டு :..................... மாதம் :..................... திகதி :...................

(ii) 2017.09.22 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :.................... மாதங்கள் :............... நாட்கள் :................

(iii) பால்: (ஆண் /பெண்) :----.

04. பட்டம் தொடர்பான விபரம் :

| பட்டம் | பல்கலைக்கழக பாடநெறியை பயின்ற காலம் (.......... தொடக்கம் .......... வரை) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லுபடியாகும் தினம் | பட்டத்திற்கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம் / பல்கலைக் கழகம் | பட்டம் (உள்வாரி / வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

05. (i) (அ) இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவைக்கு/இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவைக்கு/இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) அச்சேவையில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(இ) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) (அ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவையில் கடமையை பொறுப்பேற்ற திகதி :----.

(iii) பட்டத்திற்கு பின்னர் 2017.09.22 ஆந் திகதியில் 4(v) இல் குறிப்பிடப்பட்ட உரிய சேவை/சேவைகளின் சேவைக்காலம் :----.

(iv) 2017.09.22 ஆந் திகதியில் 4(v) இல் காட்டப்பட்டுள்ள சேவை/சேவைகளில் முழுமையான சேவைக்காலம் :----.

06. தொழிற்பயிற்சி தொடர்பான விபரம் :

| பாடநெறியைத் தொடர்ந்த நிறுவகம் (ஆசிரியர் கலாசாலை/ தேசிய கல்வியியற் கல்லூரி/ ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாடநெறியை பயின்ற கால எல்லை | |
|---|---|---|---|
| | | திகதி தொடக்கம் | திகதி வரை |
| | | | |

07. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விபரங்கள் :

| கல்வி விடுமுறையின் இயல்பு (சம்பளத்துடன் கூடிய/சம்பளமற்ற, தேசிய/வெளிநாடு) | கல்வி விடுமுறை பெற்றுக்கொண்டதற்கான காரணம் | எவ்வளவு காலப் பகுதிக்கானது | பிணைமுறிக் காலம் (........ ஆம் திகதி தொடக்கம் ........ ஆம் திகதி வரை) | பிணைமுறிக் காலப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா / இல்லையா என்பது தொடர்பாக (பூர்த்தி செய்யப்படாததாயின் அதற்காக இன்னும் இருக்கும் காலப்பகுதியைக் குறிப்பிடுக) |
|---|---|---|---|---|
| | | | | |

**கவனத்திற்கொள்க :** இதற்கு முதல் பெற்றுக்கொண்டுள்ள கல்வி விடுமுறைகளுக்குரிய மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் பிழையில்லாமல் பூர்த்திசெய்திருப்பது கட்டாயமானதாகும்.

**குறிப்பு :** தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைப் பயிலும் கால எல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்படமாட்டாது.

08. (அ) விண்ணப்பதாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா? : ஆம்/இல்லை

(ஆ) அவ்வாறிருப்பின் அது தொடர்பான தகவல்கள் :-----.

09.

| | |
|---|---|
| தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். | .............. திகதிய பற்றுச்சீட்டு இலக்கம் ............ இன் கீழ் ........... தபால் / உபதபால் அலுவலகத்திற்கு ரூ............. (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதிசெய்கிறேன்.<br>----<br>விண்ணப்பதாரரின் கையொப்பம்<br>திகதி :----. |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் என்றும் 2017.08.31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. பாடநெறிக்காக நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை :
(அதிபர், தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, நிறைவேற்று அதிகாரி, நிருவாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானதாகும்.)
மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இவ்விண்ணப்பதாரியை சேவையிலிருந்து விடுவிக்கிறேன் /விடுவிக்கவில்லை.

----,
அதிபரின் /நிறுவனத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

12. பாடநெறிக்கு ஆசிரியரை விடுவிப்பது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு:
மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியை தொடர்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவருக்கு கல்வி விடுமுறை வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

8-1031

---

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2017) - II

## First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2013(2017) - II

சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2017, மார்கழி மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குரிய பாடங்களில் ஒரே தடவையாகவோ அல்லது வெவ்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும். இவ்வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 600 உம், மொத்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 1,200 உம் பரீட்சைக் கட்டணமாகவும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் நிலையத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக வேறு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது எனவும் அறிவிக்கிறேன். பரீட்சைக் கட்டணம் பொருட்டு காசுக்கட்டளையோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

4. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளில் இரு பக்கங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 5 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவரின் ஊடாக 2017.10.02 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல், திணைக்களத் தலைவரின் சான்றுரை என்பன சகிதம் சரியாக நிரப்பி அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். (பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அங்கு விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றை கைவசம் வைத்திருத்தல் முக்கியமானது. கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல் அடங்கிய குறிப்பிட்ட உங்களின் கோரிக்கைக் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிப்பதன் மூலம் விசாரிப்பது ஏற்றதாகும்.

7. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது, நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைக் கொண்டு அல்லது அரச பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டுச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரப் பதவிநிலை அலுவலர் அல்லது பௌத்த விகாரை அதிபதிகள் அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய வழிபாட்டுத் தலங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர் ஒருவரைக் கொண்டு சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய முதல் நாளிலேயே பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடன் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது. தமக்கு உரிய பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

10. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

11. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | பாட இல. | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 1. நிர்வாகம் | 1 | 100 | 2 மணித்தியாலம் |
| 2. அரச துறை நிதி முகாமைத்துவம் | 2 | 100 | 2 மணித்தியாலம் |
| 3. ஆங்கிலம் | 3 | 100 | 2 மணித்தியாலம் |
| 4. பிரயோகப் புள்ளி விபரங்கள் | 4 | 100 | 3 மணித்தியாலம் |

(1) நிர்வாகம்- (பாட இல. 1) :

* அலுவலக மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், ஒழுங்கமைப்பு முறை
* தாபன விதிக்கோவையின் கீழ் காட்டப்படும் அத்தியாயங்கள் I, II, III, V, VI, VII, IX, XI, XII, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII
(மேற்படி அதிகாரங்கள், அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிக் கோவையின் 1 ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.)

(2) அரச துறை நிதி முகாமைத்துவம் - பாட இல. 2.- நிதி ஒழுங்குவிதிகள் கீழ்க்காட்டப்பட்ட அதிகாரங்கள் :

(i) சகல பிரிவுகளும்
(ii) சகல பிரிவுகளும்
(iii) சகல பிரிவுகளும்
(iv) சகல பிரிவுகளும்
(v) 1, 2, 3, 4 ஆம் பிரிவுகள்
(vi) சகல பிரிவுகளும்
(vii) 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

(3) ஆங்கிலம் - பாட இல. 3

**English Grammar :**

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/Compound/ Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

Writing Skills :

The Knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Internal modes of Communication
- Formal Correspondences skills
- Writing Descriptions/Explanations
- Summary Writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

Reading Skills :

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected.
* Reading and understanding the specific and general meaning of the printed text.
* Reading and interpretation (Verbal/Written)
* Understanding the Cohesion and coherence of a passage

(4) பிரயோகப் புள்ளிவிபரங்கள் - (பாட இல. 4).- தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் கைத்தொழில், விவசாயப் புள்ளிவிபரங்கள், தேசிய கணக்குகள், தகவற் தொழில்நுட்பம் (தரவு வகைப்படுத்தல்), மாதிரி அளவீடுகள், குடிசனத் தொகை மதிப்புக்கள், மக்களியல் விலைச் சுட்டெண் கள், வரைபடங்கள் போன்ற பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் புள்ளிவிபர வேலைகள் சம்பந்தமாக இயைபுடைய உத்தியோகத்தர்களின் அறிவை மதிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

11.1 அபேட்சகர்கள் சித்தி எய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தல் வேண்டும் என்பதுடன் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி எய்துவதற்கு

சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரர்களுக்கு வசதியுண்டு.

12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

12.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெறுபேற்று ஆவணம் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் வழங்கப்படும்.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே அதிகாரபூர்வமானவை.

பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
'சங்கியான மந்திரய',
இல. 306/71, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013 (2017) - II**

First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2013 (2017) - II

☐

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐

(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

1. முதல் எழுத்துக்களை இறுதியில் இட்டு விண்ணப்பதாரியின் முதல் எழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) உதாரணம் : SUNIL, J.M.U :----.
   1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (உதாரணம்- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
   1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் : ----.
   (உதாரணம்- GUNAWARDHANA, H. M. S. K.)
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. அலுவலகத்தின் பெயரும் முகவரியும் :
   2.1 அலுவலகத்தின் பெயர் : ----.
   2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   (இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3. 3.1 பால் :
   ஆண்-0
   பெண்-1

   ☐

   (உரிய இலக்கத்தைப் பெட்டியில் இடவும்)

   3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

   ☐☐☐☐☐☐☐☐☐☐

   3.3 பிறந்த திகதி :

   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4. நீங்கள் தோற்றவுள்ள தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடம்/ பாடங்கள் :
   (வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்க)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5. தற்போது வகிக்கும் பதவி :----.
   5.1 நியமனக் கடித இலக்கம் :----.
   5.2 நியமனத் திகதி :----.

6. நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? : ----.
   6.1 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.
   6.2 பற்றுச்சீட்டு இல. :----.
   6.3 திகதி :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

திரு./திருமதி/செல்வி ..............................................எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் குறித்த பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

திணைக்களத் தலைவரின் உறுதியுரை

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்ட தென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8-1117

---

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: த கொட்டு லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124246
பதிவுத் திகதி : 2017, யூலை 27
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.88, மூளாய் கிழக்கு, சுழிபுரம்

கம்பனிச் செயலாளர்.

8- 964

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள தனியார் கம்பனி 2017 ஆம் ஆண்டு ஆடி மாதம் 26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர்: பாக் குரோவ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 124220
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல.99/2, தெஹிவளை ரோட், பொறலஸ்கமுவ

எச். டீ. சீ. டீ. விஜேசிங்க,
நிறுவனத்தின் முகாமையாளர்,
சட்டத்தரணி, நொத்தாரிஸ்,
கம்பனிச் செயலாளர்.

8-987

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: DT பெக்ஸ் அன்ட் வுட் இன்டஸ்ரீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 118242
பதிவு முகவரி : இல.97/4, தெலங்கபாத்த வீதி, வத்தளை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.11.23

K.M.ஷெகான்,
கம்பனிச் செயலாளர்.

8-1002

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவாக பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏ ஜீ இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி 5408
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 300, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 3

கம்பனிச் செயலாளர்கள்,
செக்றிடேரியல் ஹவுஸ்
(பிறைவேட்) லிமிட்டட் .

இல.10,
ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

8-1018

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்.-

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.11.25
கம்பனியின் பெயர் : இயுரோ சிஸ்டம்ஸ் எம் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவு இலக்கம் : பீவீ 75663
பதிவு செய்த முகவரி : இல. 2041, கடுவெல வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்லை

செயலாளர்.

8-1019

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: டெலிகன் சொப்ட்வெயார் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.12.19
பதிவு செய்த அலுவலகம் : செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10
பதிவு இலக்கம் : பீவீ 118769

8-1027

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: இன்டர் நெஷனல் கிரியேடிவ் பெர்போமன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124512
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.08
பதிவு முகவரி : 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

இன்டர்நெஷனல் கிரியேடிவ்
பெர்போமன்சஸ் (பிறைவேட்) லிமிட்டட்.

8- 1032

---

### கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் கம்பனி தனது பெயரை மாற்றியுள்ளது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் முந்தைய பெயர்: ஹேமாஸ் சவுத் கொழும்பு ஹொஸ்பிடல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 75715
பதிவு அலுவலகம் : ஹேமாஸ் ஹவுஸ், இல. 75, பிரேபுறுக் பிளேஸ், கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : சென்சுவரி ரிசோர்ட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

சென்சுவரி ரிசோர்ட்ஸ் லங்கா
(பிறைவேட்) லிமிட்டட்
ஹேமாஸ் கோப்பரேட் சர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள் சார்பாக.

8- 1087

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் (சட்டம்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 29 ஆம் பிரிவின் கீழ் , லிவர் பிரதர்ஸ் எக்ஸ்போட்ஸ் அன்ட் மார்கடிங் லிமிட்டட் , 2017, ஓகத்து மாதம் 04ஆம் திகதியன்று தனியார் கம்பனியாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. இச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பெயரில் "லிமிட்டட்" எனும் சொல் பதிலீடு செய்யப்பட்டு இறுதியில் அதன் பெயர் "பிறைவேட் லிமிட்டட்" எனும் சொற்கள் சேர்க்கப்பட்டு கூறப்பட்ட கம்பனியின் பெயர் லிவர் பிரதர்ஸ் எக்ஸ்போட்ஸ் அன்ட் மார்கடிங் (பிறைவேட்) லிமிட்டட் என வாசிக்கப்படக் கூடியதாக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

லக்சர மாரப்பன,
செயலாளர்.

8- 1088

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் (சட்டம்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 29 ஆம் பிரிவின் கீழ் , புறூக் பொன்ட் சிலோன் லிமிட்டட் , 2017, ஓகத்து மாதம் 04ஆம் திகதியன்று தனியார் கம்பனியாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பெயரில் "லிமிட்டட்" எனும் சொல் பதிலீடு செய்யப்பட்டு இறுதியில் அதன் பெயர் "பிறைவேட் லிமிட்டட்" எனும் சொற்கள் சேர்க்கப்பட்டு கூறப்பட்ட கம்பனியின் பெயர் புறூக் பொன்ட் சிலோன் ( பிறைவேட்) லிமிட்டட் என வாசிக்கப்படக் கூடியதாக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது

சபையின் கட்டளைப்படி,

லக்சர மாரப்பன,
செயலாளர்.

8- 1089

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் (சட்டம்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 29 ஆம் பிரிவின் கீழ் ஆர்.ஓ.மென்னெல் சிலோன் லிமிட்டட் , 2017, ஓகத்து மாதம் 04ஆந் திகதியன்று தனியார் கம்பனியாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பெயரில் "லிமிட்டட்" எனும் சொல் பதிலீடு செய்யப்பட்டு இறுதியில் அதன் பெயர் "பிறைவேட் லிமிட்டட்" எனும் சொற்கள் சேர்க்கப்பட்டு கூறப்பட்ட கம்பனியின் பெயர் ஆர்.ஓ.மென்னெல் சிலோன் ( பிறைவேட்) லிமிட்டட் என வாசிக்கப்படக் கூடியதாக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது

சபையின் கட்டளைப்படி,

லக்சர மாரப்பன,
செயலாளர்.

8- 1090

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் (சட்டம்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 29 ஆம் பிரிவின் கீழ் , யுனிலிவர் சிலோன் சேர்விசஸ் லிமிட்டட் , 2017, ஓகத்து மாதம் 04 ஆந் திகதியன்று தனியார் கம்பனியாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பெயரில் "லிமிட்டட்" எனும் சொல் பதிலீடு செய்யப்பட்டு இறுதியில் அதன் பெயர் "பிறைவேட் லிமிட்டட்" எனும் சொற்கள் சேர்க்கப்பட்டு கூறப்பட்ட கம்பனியின் பெயர் யுனிலிவர் சிலோன் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் என வாசிக்கப்படக் கூடியதாக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது

சபையின் கட்டளைப்படி,

லக்சர மாரப்பன,
செயலாளர்.

8- 1091

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: நிமன்சே (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 124362
முகவரி : இல. 39/7, ஆர்.ஜீ. சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 7

செக்ரடரீஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

பீவீ 5958

8- 1095/1

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: ரிலயன்ஸ் மைகிரேஷன் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 124440
பதிவு முகவரி : இல. 320/08, ராமநாயக்க மாவத்தை, அராவல, பன்னிப்பிட்டிய

செக்ரெடேரியஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

பீவீ 5958

8- 1095/2

---

**ஹிமால் சவுத் ஏசியன்**
**கூட்டிணைப்பு பற்றிய பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ்,

'ஹிமால் சவுத் ஏசியன்' பிரிவு 34 இற்கேற்ப 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி கம்பனி பதிவு இல. ஜீ ஏ 3383 இன் கீழ் கூட்டிணைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டது என்பதனையும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி 116/10, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7, இலங்கை என்பதனையும் நாம் இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

சென்ரல் கோப்பரேற் அன்ட் கொன்சல்ரன்சி
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிக்கான கம்பனிச் செயலாளர்.

இல. 116/10,
றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 7.

8- 1100

---

**இவென்ட்வாலா லங்கா ( பிறைவேட்) லிமிட்டட்**
**பதிவு செய்தல் சம்பந்தமான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், இவென்ட்வாலா லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் ஆனது 2017 ஆம் ஆண்டு ஓகத்து 08 ஆந் திகதி கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 123937 இன் கீழ் பதிவாகியுள்ளது என இத்தால் அறிவிக்கின்றோம். மேலும் இல. 116/ 10, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7 இல் இதன் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென்ரல் கோப்பரேற் அன்ட் கொன்சல்ரன்சி
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 116/10,
றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 7.

8- 1101

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: சில்வர் சில்ட் காமெண்ட் மெனுபக்ஸர்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124774
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.16
பதிவு முகவரி : 414/1B, பேஸ்லைன் தோட்டம், தெமட்டகொடை, கொழும்பு 9

அபூபக்கர் அப்துல் கனி,
கம்பனிச் செயலாளர்.

8- 1127

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம்,அம்பாந்தோட்டைஇன்டநெஷனல்போட்சேர்விசஸ்கம்பனி(பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் கம்பனியொன்று கம்பனி இல. பீவீ 124269 இன் கீழ் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதோடு கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி 'சயுருபாய', மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை இன்டநெஷனல் போட்
சேர்விஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

8- 1141

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம், அம்பாந்தோட்டை இன்டநெஷனல் போட் குருப் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் கம்பனியொன்று கம்பனி இல. பீவீ 124268 இன் கீழ் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதோடு கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி 'சயுருபாய ' மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை இன்டநெஷனல் போட்
குருப் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

8- 1142

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

தங்கல்ல , கதுருபொகுன, லேபிமவத்த ஆகிய இடத்தில் வசித்த மற்றும் தற்போது Via, Sempiopne, 106 Meina, No 28046, Italy' இல் வசிக்கும் மத்தும பட்டபெந்திகே கயானி ஆகிய நான், தங்கல்ல' பிரசித்த நொத்தாரிசு திருமதி புத்திமதி பத்ரானி ஜயவீர அவர்களால் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இல. 1580 ஆம் இலக்க விசேட அற்றோணிப்பத்திரத்தை தங்கல்ல, கதுருபொகுன, லேபிமவத்த இல. 135 இல் வசிக்கும் மத்தும பட்டபெந்திகே பென்டிஸ் சில்வா அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அவ் அற்றோணித் தத்துவத்தை மீளப்பெற்று செயலிழக்கச் செய்துள்ளதாகவும் இது மேற்கொண்டு மத்தும பட்டபெந்திகே பென்டிஸ் சில்வா அவர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன் .

மத்தும பட்டபெந்திகே கயானி.

8-1003

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலக்கம் 480/150, காலி வீதி, வெள்ளவத்தை , கொழும்பு 6 என்ற முகவரியில் வசிக்கும் இந்திரா ஜராங்கனி பெரேரா மற்றும் அதே முகவரியில் வசிக்கும் அனுஷ்கா லக்சினி ஹேவாவித்தாரன பெரேரா ஆகிய நாம் ஜனக டீ விக்ரமநாயக்க என்பவரால் மெல்போர்ன் நகரில் 2016.10.09 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித்தத்துவப்பத்திரம் மூலம், இலக்கம் 87/2/பி, Y.R.D. சில்வா தோட்டம், தெஹிவளை என்ற முகவரியில் வசிக்கும் அத்துகோரளகே கயானி ருச்சிலா பெரேரா என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்தும் 2017.07.29 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்பதையும் இதன் பின்னர் அவர் எமது பெயரால் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறவித்துக்கொள்கிறோம்.

இந்திரா ஜராங்கனி பெரேரா,
அனுஷ்கா லக்சினி ஹேவாவித்தாரன பெரேரா.

8- 1020

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கம்பனி பதிவு இலக்கம் 19429461-000-10-16-2 ஐயும் 16 ஆம் மாடி, wing on centre, III connaught Road, Central Hong Kong என்ற பதிவு முகவரியையும் கொண்ட ஹொங்கொங் சட்டத்திற்கமைவாக கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியான PRYM ( Hong Kong) Limited இன் பணிப்பாளர்கள் சபை ஆகிய நாங்கள், இலக்கம் 80/2 , ஆனந்த ராஜகருணா மாவத்தை, பொரளை, கொழும்பு 8 என்ற முகவரியையுடைய KO CINDY Yuen Hung என்பவருக்கு 2008. 07.01 அன்று வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்து நீக்கி வெறிதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

PRYM ( Hong Kong) Limited
பணிப்பாளர் சபை .

8-1040

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலக்கம் 121/6, மீமனகொட வீதி, கலல்கொட, பன்னிப்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் ரத்நாயக்க பதிரென்னஹெலாகே தேவிகா ஜயலக்ஷ்மி ஆகிய நான், என்னுடைய அசையா ஆதனங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக, இலக்கம் 11/ 5/ பீ, ரணசிங்ஹ மாவத்தை, ஹிரிபிடிய, பன்னிப்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் ரத்நாயக்க பதிரென்னெஹெலாகே விஜயலக்ஷ்மி என்பவருக்கு வழங்கப்பட்டதும்,

பிரசித்த நொத்தாரிசு திருமதி யசாஞ்சலி தேவிகா ஜயதிலக என்பவரினால் 2013.11.19 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 383 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவமானது, இன்று 2017.08.16 முதல் செல்லுபடியாகும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

ரத்நாயக்க பதிரென்னஹெலாகே தேவிகா ஜயலக்ஷ்மி.

8-1043

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இல. 470/ 5, கிரிமத்தவத்தை, கொடகம என்ற முகவரியில் வசிக்கும் லியன ஆரச்சிகே காமினி விஜேசிங்ஹ ஆகிய நான், பரிஸ்டரும் விக்டோரியா உயர் நீதிமன்ற சொலிசிட்டருமான திரு. டபிள்யூ. ஜயகொடி என்பவரினால் 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திப்பட்டதும், இலக்கம் 78, வட்சன்ஸ் வீதி, Glen Wavrley 3150 in the State of Victoria, Australia வில் வசிக்கும் சிறிமதீ மானெல் விஜேசிங்ஹ ( தே.அ.அ.இல. 665051218V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் மேற்கு வலய அலுவலகத்தில் 02 ஆம் பிரிவில் 163 ஆம் புத்தகத்தில் 650 ஆம் பக்கத்தில் 2008, சனவரி 23ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுமான அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப் படுகின்றதென இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

8-1046

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

குருநாகல் 'தரங்க' ஜயந்திபுர 296 ஆம் இலக்கத்தில் வதியும் புத்கமு ராலலாகே றியன்சி பண்டார ( தே.அ.அ.இல. 653251645V) ஆகிய நான், இரத்மலானை 02 ஆவது ஒழுங்கை 41 ஆம் இலக்கத்தில் வதியும் பொன்மனி நோர்மா கிரெஸ் லோர்டன் அவர்களுக்கு வழங்கிய ரோம் இலங்கைத் தூதுவர் சார்பில் சட்டத்தரணி திருமதி ராணி புளத்வெல அவர்களால் 2013.06.06 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய விசேட அற்றோணித்தத்துவத்தை ( குருநாகல் பிரசித்த நொத்தாரிசு பிலிஷியன் பெரேரா அவர்களால் சமாப்பிக்கப்பட்ட ) இத்தால் இரத்துச்செய்வதோடு இதன் பின் பொன்மனி நோர்மா கிரேஸ் லோர்டன் என்பவர் அவ் விசேட அற்றோணித்தத்துவத்தின் கீழ் எனது பெயரில் அல்லது எனது சார்பாக புரியும் எந்தவொரு அலுவல்களுக்கும் நான் எவ்விதத்திலும் பொருப்பாளியல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

புத்கமு ராலலாகே றியன்சி பண்டார.

8-1075

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலக்கம் 98, மெதமஹவெல, மஹவெவ என்ற முகவரியில் வசித்தவரும் தற்போது இலக்கம் 65/ 7, சஹன் உயன மிரிஸ்வத்தை, புவக்பிட்டிய என்ற முகவரியில் வசிப்பவருமான விக்ரமசேகர இமிஹாமிலாகே வசன்த காமினி விக்ரமசேகர ஆகிய நான், நிஷாந்தி விக்ரமசேகர என்றழைக்கப்படும் நிஷாந்தி யோகரத்ன என்பவருக்கு வழங்கப்பட்டதும், இலங்கைப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 1997.05.15 ஆந் திகதி 88 ஆம் அதிகாரம், 119 ஆம் பக்கம் தினப்புத்தக இலக்கம் 01 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான 6726 ஆம் இலக்கமுடைய பொது அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கையின் பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்வதுடன், இதன் பின்னர் என்சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்

விக்ரமசேகர இமிஹாமிலாகே
வசன்த காமினி விக்ரமசேகர.

2017.07.29.

8- 1099

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

சிலாபம், மைக்குளம், ஈபர்ட் சில்வா தோட்டம், 78/06 பி இல் வதியும் அன்டனி டென்சில் ஜயசிங்ஹ (தே.அ.அ.இல. 531122801V) ஆகிய நான், இப்போது வரை என்னால் எனது மனைவியாகிய சிலாபம், மைக்குளம், ஈபர்ட் சில்வா தோட்டம் , இல. 47 ஐக் கொண்ட 'பெதும' வில் வதியும் சந்திரா வீரசிங்ஹ என்பவருக்கு உதவிப்பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 09 ஆம் பதிப்பில் 422 ஆம் பக்கத்தில் இல. 982 இன் கீழ் பதிவு செய்துள்ள 2005.08.22 ஆந் திகதிய அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும், இத்திகதி தொடக்கம் எனது கூறப்பட்ட அற்றோணித்தத்துவதாரருக்கு கூறப்பட்ட அற்றோணித்தத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எனக்கு உரித்துடைய அசையும் அல்லது அசையாத சொத்துக்கள் சம்பந்தமாக செய்யப்படும் எந்தவொரு செயற்பாடும் செல்லுபடியாகதென இத்தால் அனைவரும் அறிந்து கொள்ளட்டும்.

அன்டனி டென்சில் ஜயசிங்ஹ.

8-1113

# ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – இரத்மலானைக் கிளை

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டட்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விலை மதிப்புமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த வீரசிங்க கெதர சுரேஷ் கிரிஷாந்தி வீரசிங்ஹ மற்றும் மனுவெல் பீரிஸ்லாகே ஜெனிட்டா காஞ்சனா குமாரி பீரிஸ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எல். ஆர். விதாரன 2015.08.21 ஆந் திகதியுடைய முறி இல. 1391 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதால், அத்துடன் மிகுதி முற்பணமும் வட்டியும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் சேர்ந்து அறவிடுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் இக்கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

இக் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26ஆந் திகதி காலை 11.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம்,களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன தல்பிட்டிதெபத்த பண்டாரகம பிரதேச சபை மற்றும் மாவட்ட செயலாளர் தொகுதியில் இலக்கம் 691 B பட்டதொம்பதுவ கிராம அலுவலர் எல்லையில் அலுபோமுல்ல கிராமத்தில் உள்ள தெல்காவத்த காணிக்கு நிலஅளவையாளர் எம்.டி.என்.பர்னாந்துவின் 2008.05.24 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 6181 இல் காண்பிக்கப்பட்ட லொட் ஏ. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.11.48பே.) அல்லது 0.029036 ஹெக்டேயர் இக்காணியில் உள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.-** 2017.07.07 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.07.10 ஆந் திகதியுடைய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.-** பாணந்துறை நகரத்திலிருந்து ஹொரண ரோட்டில் 5.5 மீற்றர் சென்று கல்வெட் 6/1 ஐத் தாண்டி இடது பக்கம் உள்ள பட்டதொம்பதுவ ரோட்டில் 600 மீற்றர் சென்று இடது பக்கம் திரும்பி வாகனங்கள் செல்லும் பிரத்தியேக ரோட்டில் 40 மீற்றர் சென்று முதலாவது திருப்பம் வலது பக்கம் இது 15 அடி ரோட் காணி இரண்டாவதாக காணப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா;
(6) விற்பனை சம்பந்தமாக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணமாக வங்கிக்கு செலுத்த வேண்டும்.மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் 30 நாட்களுக்குள் முற்பணம் திருப்பி செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல.011-2445393, 011-2396520.
தொலைநகல்: 011-2445393
மின்னஞ்சல்: senaservice @ sltnet.lk.

8- 1060

---

### செலான் வங்கி பீஎல்சீ -ருவன்வெல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

#### ஏல விற்பனை

"கடன்பட்டோர் என்ற வகையில் அம்பகலவைச் சேர்ந்த ஹொரவல விதானகே ஹேமந்த / ரங்கவதிகே ஷமில இனோஷா பெரேரா என்பவர்களுக்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து .

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம் புளத்கொஹுபிட்டிய செயலாளர் பிரிவுக்குட்பட்ட ( உடுவ பலாத்த கீழ் புலத்கம கோரள) பிரதேச சபை எல்லைக்குட்பட்ட லெவல கிராம அலுவலர் பிரிவில் யக்கல அல்லது லெவல இல் அமைந்துள்ள "வட்டகடெனிய முகலான அல்லது கம்பட முகலான" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. கே. ஏ. குலசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.05.08 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1671 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 , கட்டிடங்கள் மற்றும் அனைத்துடனும் ஒரு றூட் மற்றும் நாலு பேர்ச்சஸ் (0ஏ.1றூ.4பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட துண்டு 1 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்து 2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** ருவான்வெல மத்திய நகரத்திலிருந்து கேகாலை வீதி மார்க்கமாக சுமார் 3.50 கி.மீ. சென்று வலது பக்கத்திலுள்ள புலத்கொஹுபிட்டிய பிரதானவீதியால் சுமார் 8 கி.மீ. ( மைல்கல் இல. 28/6) சென்றால் வரும் புனஹெல கிராமத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2017.07.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.07.14 ஆந் திகதிய "டெயிலி மிரர்" ,"லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2017.07.31 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;
(2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90 % விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் கோபுரம், இல.90, காலி வீதி, கொழும்பு 3" இடமிருந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456478, 011- 2456479.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி ரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 011- 2572940

8- 1076

---

### செலான் வங்கி பீஎல்சீ - பட்டதாரிகள் தொழில் முயற்சிகள் கடன் திட்டம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

#### ஏல விற்பனை

"கடன்பட்டோர் /ஈடுவைத்தோர் என்ற வகையில் பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த கமனி ரேணுகா ரவனெல்ல என்பவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம கோரளையிலுள்ள பல்லே பத்துவில் கடுவல செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆசிரி உயன பிரிவில் தலங்கம தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 479 /B இல் அமைந்துள்ள "மேகுன் எஸ்டேட்" என்று அழைக்கப்படும் காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ.பீ. டெரனியாகல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1991.03.08 இல் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 557 சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 4 கட்டிடங்கள் , மரங்கள், பயிர்வகைகள் மற்றும் அனைத்துடனும் இரண்டுடன் தொந்நூற்று ஒன்பதின் கீழ் நூறு பேர்ச்சு (0ஏ.0றூ.2.99/ 100பே.) அல்லது 0.0075 ஹெக்டயர்கள் விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 557 கொண்டுள்ளது.

2. தலங்கம தெற்கில் அமைந்துள்ள "மேகுன் எஸ்டேட்" என்று அழைக்கப்படும் காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. டெரனியாகல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1991.03.08 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 557 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 5 ( பொதுப்பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள கழிவு அறை) பூச்சியம் தசம் ஐந்து நாலின் கீழ் நூறு பேர்ச்சஸ் ( 0ஏ.0றூ.0.54/100பே.) அல்லது 0.00137 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 557 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்து 2017, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** பத்தரமுல்ல நகரத்திலிருந்து சுமார் 1.5 கி.மீ பன்னிப்பிட்டிய வீதியில் இடது கைப்பக்கத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2017.07.14ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.07.14 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2017.07.31 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;
(2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90 % விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் கோபுரம், இல.90, காலி வீதி, கொழும்பு 3" இடமிருந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456478, 011- 2456479.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி ரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 011- 2572940

8- 1077

---

### கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ கம்பளைக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து யட்டிநுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தொடம்வல கிராமத்தில் சியம்பலாகொடயிலிருந்து தியபலாகொட வரை செல்லும் பாதையில் அமைந்துள்ள மலுவேவத்த என்றழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ எம். எம்.அஷோகா விஜேசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.05.18 ஆந் திகதிய 1037 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 21.91 பேர்ச். பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** பேராதனையிலிருந்து கொழும்பு பாதையில் கிரிபத்கும்புர சந்தி வரை சென்று வலது பக்கமாக திரும்பி வத்துரகும்புர பாதைக்கு பிரவேசித்து அந்த பாதையில் சுமார் 03 கி.மீ. தூரம் சென்று இடதுபக்கமாகவுள்ள சியம்பலாகொட பாதைக்கு பிரவேசித்து ( தொடம்வல தேவால பாதை சுமார் 500 மீற்றர் தூரம் சென்றால் பாதையின் இடதுபக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் லியன முதியன்சேலாகே சுசில் தம்மிக லீலாரத்ன பிட்டவல என்பவர் கடன்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2017.01.20ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017. 01.10 ஆந் திகதிய லக்பிம, த ஐலன்ட் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப் படுத்தல் கட்டணமும் .

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** சிரேஷ்ட முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ , கடுகன்னாவ வீதி, கம்பளை. தொலைபேசி: 081- 2354131, 081- 235432-33.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, தூட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595/071- 8446374/071-4962449
e. mail: wijeratne jayasuriya@ gmail.com

8- 1079

---

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

#### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

**பிபிலயில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும் ஜே.எம்.ஜே. மெட்டல் கிரஷர் ( பிறைவேட்) லிமிட்டட் கடப்பாடுடையதாகவும் ஜயசுந்தர முதியன்சேலாகே ஜயலத் பண்டார மற்றும் மாயாதுன்னகே தானி ஸ்ரீயானி மாயாதுன்ன ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ இனால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் வசதிகளுக்காக அம்பாறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சசிகா நிரோஷினி செக்ஸ்டஸ் த சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.09.16 ஆந் திகதிய 555 ஆம் இலக்க மற்றும் 2015.05.22 ஆந் திகதிய 628 ஆம் இலக்க ஈட்டு முறிகளினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் நிலையான மற்றும் அசையும் சொத்துக்கள்**

2017.10.04 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள பிபிலே பிட்டகும்புரயில் ஜே.எம்.ஜே. மெட்டல் கிரஷர் ( பிறைவேட்) லிமிட்டட் சூழலில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விபரம்.**- மேல் விபரிக்கப்பட்டுள்ள முகவரியில் உள்ள காணியினுள் அல்லது அதன் மீது வைக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் மற்றும் அல்லது அங்கு காணப்படும் கீழ்க் குறிப்பிடப்படுபவை.

| | |
|---|---|
| 1. லோடர் ( லோடர்) தொடரிலக்கம் 80 9268 | 01 |
| 2. ஹிதாச்சி எக்ஸவேட்டர் செசி இல. 145- 41812 | 01 |
| 3. கொமட்சு எக்ஸவேட்டர் செசி இல. 58941 | 01 |

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2017.07.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.07.17 ஆந் திகதிய தினசரி "திவயின", "த ஐலன்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப் படுத்தல் கட்டணமும் .

கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

'மேற்கூறிய ஏலவிற்பனை முன்னறிவித்தலின்றி நிறுத்தி வைக்கும் மற்றும் இரத்துச் செய்யும் முழு உரிமையும் வங்கிக்கு உண்டு'.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சட்டப் பிரிவு டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டீ. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-2371371 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 071-8446374/ 071-4962449/081-2210595

8- 1080

---

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

**பிபிலே பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொககொன்ன கிராமத்தில் அமைந்துள்ள "நாகஹவத்த மற்றும் பெரலியபிட்டலந்த" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரீ.பி அத்தநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.06.19 ஆம் திகதிய மொ 411 ஆம் இலக்க வரைபடத்தில் ( இது உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர்.எம். எஸ். பண்டார 2014.11.12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட) பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 மற்றும் 02 எனும் இரு காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.**

**இது 03 றூட் -5 பேர்ச். பரப்பளவானது**
**( லொட் 01- றூ01. பே.19)**
**(லொட் 02- றூ01. பே.26)**

**இவ்வாதனம் பிபிலயில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும் ஜே.எம்.ஜே. மெட்டல் கிரஷர் (பிறைவேட்) லிமிட்டட் கடப்பாடுடையதாகவும் பிபிலையில் வசிக்கும் ஜயசுந்தர முதியன்சேலாகே ஜயலத் பண்டார மற்றும் மாயாதுன்னகே தானி ஸ்ரீயானி மாயாதுன்ன ஆகியோர் ஈட்டாளர்களாகவும் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ இனால் பெற்றுக்கொண்ட கடன் வசதிகளுக்காக அம்பாறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சசிகா நிரோஷினி செக்ஸ்டஸ் த சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.05.22 ஆம் திகதிய 628 ஆம் இலக்க முறியின் மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

2017.10.04 ஆந் திகதி மு.ப. 11.15மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- பிபிலே நகரத்திலிருந்து பதியதலாவ பாதையில் இலுக்பத்தன சந்தி வரை வந்து இங்கிருந்து வலது பக்கமாக திரும்பி அப்பாதையில் சுமார் 2.3 கி. மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2017.07.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.07.17 ஆந் திகதிய தினசரி "திவயின", "த ஐலன்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ( நூற்றுக்குப் பத்து சதவீதம்) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப் படுத்தல் கட்டணமும் .

கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

'மேற்கூறிய ஏலவிற்பனை முன்னறிவித்தலின்றி நிறுத்தி வைக்கும் மற்றும் இரத்துச் செய்யும் முழு உரிமையும் வங்கிக்கு உண்டு'.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- முகாமையாளர், கடன் அறவிடுதல் பிரிவு, டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டீ. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-2371371 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 071-8446374/ 071-4962449/081-2210595

8- 1086

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. –பாதுக்கை கிளை**

முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு ( மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் எல்லைக்குள், ஹோமாகமை தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள், ஹோமாகமயில் அமைந்துள்ளதும் "இம்புல்லேகந்தவத்தை என்ற கட்டகஹட்டே" என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட கவட்டு வரைபடம் இல. 52001 ( துண்டு 04) இல் காணிப்பாகம் 174 இனது அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**காணியின் விஸ்தீரணம்( 0. 222ஹெக்.)**

(பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஆர்.ஆர்.ஜே. திசேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016, செத்தெம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 869 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவிற்கு ஈடாக மற்றும் அடைமானமாக கடப்பாடுடையவர்களான பத்ததேகதோன இனோக்கா தனுஜா மற்றும் பத்ததே தொன் சோமபால ஆகியோரிற்கு அளிக்கப்பட்ட கடன்வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- ஹோமாகமைச் சந்தியிலிருந்து 4 வழி சந்தி எதிர்கொள்ளும் வரை கொட்டாவையை நோக்கி ஏறக்குறைய 750 மீற்றர் சென்று அச்சந்தியில் நகர் வீதி என அழைக்கப்படும் வீதிக்கு வலப்பக்கம் திரும்பி அந்நகர் வீதியில் ஏறக்குறைய 400 மீற்றர் தூரம் சென்று கெமுனுமாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி அக் கெமுனு மாவத்தையில் ஏறக்குறைய 100 மீற்றர் தூரம் சென்று இறுதியாக இம்புல்கந்த மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 100 மீற்றர் தூரம் செல்ல இவ் வீதியில் இடப்பக்கத்தில் அமைந்துள்ள சொல்லப்பட்ட பின்னரான வீதிக்கு எல்லையாக இருக்கின்ற விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 300 மீற்றர் செல்லவும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2017, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் எம்மால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2017, யூலை 07 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017 யூலை 11 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்);
